DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 96/2026
Miscellaneous :
Sessions : PW 5
Deposition of Witness for
**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | வெங்கடேசன் |
| Father / Husband Name | அரிகிருஷ்ணன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 14.05.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சீதாபுரத்தில் வசித்து எலக்டீரிஷனாக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** கடந்த 05.04.2025 ம் தேதி உத்தமநல்லூர் கழனி அருகே உள்ள சாலையில் எங்கள் ஊரை சேர்ந்த ராகவன் என்பவருக்கு ஏற்பட்ட விபத்து சம்மந்தமாக போலிசார் விசாரித்து வரைபடம் வரைந்து மேற்படி தாளில் இருந்த விவரங்களை படித்து காண்பித்தார்கள். அதற்கு சாட்சியாக நானும் பாலாஜி என்பவரும் கையொப்பம் செய்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. நான் கையொப்பம் செய்த தாளில் என்ன விவரம் எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இறந்தவர் எனது உறவினரா என்றால் இல்லை. ஊர்காரர் ஆவார். போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**